நல்லூர் கிளை நூலகம்

அண்ணா
கல்வி நிலையம்
செருக்-ன சந்தி, நாரந்தனை,
(VC அருகாமை)
G.C.E (O/L)
கணிதம்
திரு V. குமரன்
பகுதி:
பங்கும் சரக்கு முகமும்
ஆரம்பம்: 27-07-86
காலை 9-45
உடன்
தொடர்புகொள்ளவும்.

Registered as a Newspaper

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ.1/-

நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன
அண்ணா
கல்வி நிலையம்
9, G.C.E.O/L வகுப்புகள்
கணிதம்: திரு. குமரன்
திரு. சேவியர்
விஞ்ஞானம்: திரு. குமரன்
திரு. ஆனந்தன்
சமூகக் கல்வி: திரு. யோசப்
தமிழ்: திரு. சர்மா
ஆங்கிலம்: பிரபல ஆசிரியர்

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஸ்ரீ ஆடி மீ 1 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜுல்கஃ பிறை 9 (17-07-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:-206

கமாண்டோக்கள் மீது புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 17 மட்டக்களப்பு மாவட்டத்தில் கமாண்டோ பொலிஸார் மீது இரு இடங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;—

நேற்று திருக்கோவில் இராணுவ முகாமில் இருந்து காலை 8 மணியளவில் ஜீப் வண்டியொன்றில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது நாம் கிரனேட் தாக்குதல் நிக

(4ஆம் பக்கம் பார்க்க)

மூதூரில் தமிழ் அகதிகள் 67 பேர் சீருடையினரால் கொடூரக்கொலை?

யாழ்ப்பாணம், ஜூலை 17 மூதூர் மல்லிகைத்தீவை அண்டிய பகுதிகளில் பெண்கள், குழந்தைகள் உட்பட 67 தமிழ் அகதிகள் சீருடையினரால் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்டதாக அங்கிருந்து வந்த தகவல்கள் தெரிவித்தன. எனினும் செய்தி அச்சுக்குப் போகும் வரை விவரங்களை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

மூதூர், தெஹிவத்தை, சேருவில ஆகிய இடங்களில் இருந்து புறப்பட்ட சிப்பாய்களே இந்த மனித வேட்டையை நடத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்துச் சொல்லப்படுவதாவது:-

நேற்று அதிகாலை 4 மணியளவில் மணற்சேனை, பச்சையனூர், பெருவெளி, மல்லிகைத்தீவு ஆகிய பகுதிகளைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்திய சிப்பாய்கள் அகதிகள் தங்கியிருந்த இடங்களுக்குச் சென்று இந்தக் கொலைகளை நடத்தினர்.

கொல்லப்பட்டவர்களில் பதினைந்து பேர்

(4ஆம் பக்கம் பார்க்க)

எதிர்ப்பு இயக்கம்

மகாசங்கம் நடத்தும்

கொழும்பு, ஜூலை 17 மாகாணசபைத் திட்டத்தை எதிர்த்து மகா சங்கம் எதிர்ப்பு இயக்கம் நடத்தும்.

நேற்று நடந்த மகா சங்கக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

எப்படியான இயக்கம் நடத்துவது என்பது பற்றி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

இதனிடையில் மாகாண சபைத் திட்டம் பற்றிய மகாசங்கத்தின் நிலைப்பாட்டை விளக்கி ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு விரிவான கடிதம் ஒன்றை எழுதுவதென்றும் நேற்று முடிவு எடுக்கப்பட்டது.

பெரும்பாலும் இன்று மகாசங்கத்தின் கடிதம் ஜனாதிபதிக்கு அனுப்பப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்றைய கூட்டத்துக்கு அஸ்கிரிய பீடாதிபதி பலிபானசந்தானந்த தேரர் தலைமை வகித்தார்.

இதனிடையில் மாகாண சபைத் திட்டத்தை மல்வத்தை மகா நாயக்க தேரரும் எதிர்ப்

(4ஆம் பக்கம் பார்க்க)

அரசியல் கட்சி மாநாடு

தமிழர் அபிலாஷை; இணக்கம் இல்லை

நவசமசமாஜக் கட்சி பங்குபற்ற மறுப்பு

கொழும்பு, ஜூலை 17 தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் அடிப்படை அம்சங்கள் குறித்து இன்னும் இணக்கம் காணப்படவில்லை.

இந்நிலையில் குழு நிலையில் கூடி ஆராய்வதில் எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை.

இவ்வாறு கூறி நவசமசமாஜக் கட்சிப் பிரதிநிதிகள் நேற்று அரசியல் கட்சிகளின் குழு நிலைக் கூட்டத்தில் கலந்து கொள்ள மறுப்புத் தெரிவித்தனர்.

நேற்று நடைபெற்ற அரசியல் கட்சிகள் குழு நிலைக் கூட்டங்களில் நவசமசமாஜக் கட்சி உறுப்பினர்கள் கலந்துகொள்ளவில்லை.

தமிழரின் பரம்பரைத் தாயகம் பற்றியும் தமிழரின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் ஏனைய அடிப்படை அம்சங்கள் குறித்தும் இணக்கம் இன்னும் காணப்படவில்லை.

தமிழர் கட்சிகளும் அரசியல் கட்சிகள் மாநாட்டில் பங்குபற்ற

(4ஆம் பக்கம் பார்க்க)

அடுத்த வாரம் முதல்

வவுனியா வரை யாழ்தேவி சேவை?

யாழ்ப்பாணம், ஜூலை 17 தற்பொழுது கொழும்பிலிருந்து அனுராதபுரம் வரை நடத்தப்பட்டு வரும் யாழ்தேவி ரயில் சேவை அடுத்த வாரம் முதல் வவுனியாவரை நடத்தப்படும் என நம்பகமாக அறியவருகிறது.

இதற்கான அங்கீகாரத்தைப் போக்குவரத்து அமைச்சர் வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்பவர்களுக்கு ரயிலைப் பிடிப்பதற்கான பஸ் சேவையும் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வரையும் நடத்தப்படும் (உ-10)

சுபநேரம்

17—07—1986
வியாழக்கிழமை
சுபநேரம்:
7-30 முதல் 9-00 வரை
ராகுகாலம் :-
1-30 முதல் 3-00 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
சயன ஏகாதசி விரதம்

பொதுத் தேர்தலா? 1989 இல் பரிசீலனை செய்வேன் என்கிறார் ஜே ஆர்!

கொழும்பு, ஜூலை 17 பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற தங்களின் கோரிக்கையை 1989 இல் நான் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வேன்.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன, சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு அனுப்பிய 8 வரிப் பதிலில் தெரிவித்து இருக்கின்றார்.

மாகாணசபை யோசனைகளை நிராகரித்தும் அரசியல் கட்சிகள் மாநாட்டில் பங்கு பற்ற மறுத்தும் சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா ஜூலை 15 ஆம் திகதி ஜனாதிபதிக்கு பத்து பக்கக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

அதற்கு அனுப்பிய பதில் கடிதத்திலே

(4ஆம் பக்கம் பார்க்க)

எஸ். பிக்களுக்கு புதிய அதிகாரம்

கொழும்பு, ஜூலை 17 அவசரகாலச் சட்டத்தின் கீழ் மாவட்டப் பொலீஸ் அதிபர்களும் சந்தேக நபர்கள் மீது தடுப்புக்காவல் உத்தரவு பிறப்பிக்க முடியும்.

இதற்கான அதிகாரம் பொலீஸ் அதிபர்களுக்கு பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தடுப்புக்காவல் உத்தரவு 90 நாட்களுக்கு அமுலில் இருக்கக்கூடியது.

இதுவரை காலமும் பொலீஸ் மா அதிபர், பிரதி பொலீஸ்மா அதிபர்களுக்குத் தான் இந்த அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. (உ-எ)

அமிர் கருத்து

கொழும்பு, ஜூலை 17 போதிய அதிகாரங்கள் பெற்று ஒரே பிரிவாக வாழ்வதையே தமிழ் மக்கள் விரும்புகின்றனர். எம் மக்கள் பிரிக்கப்படுவதை நாம் விரும்பவில்லை.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் தெரிவித்ததாக இந்திய வானொலி அறிவித்தது. (உ)

லொறிகள், மினிபஸ்கள் நேற்று நடத்திய பேரணி

யாழ்ப்பாணம், ஜூலை 17 நூற்றி ஐம்பதுக்கும் அதிகமான லொறிகள், மினி பஸ்கள் கலந்து கொண்ட மாபெரும் பேரணி ஒன்று நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

கொழும்பு செல்லும் லொறிகள் இராணுவ முகாமில் 'பாஸ்' பெற்றுச் செல்ல வேண்டும் என்ற உத்தரவை ஆட்சேபித்தே இந்தப் பேரணி நடத்தப்பட்டது.

வட பிராந்திய லொறி உரிமையாளர் சங்கம், மினி வான் நடத்துநர் சங்கம், வர்த்தகர் சங்கம், யாழ் முஸ்லிம் ஒன்றியம் ஆகிய சங்கங்கள் கூட்டாக இணைந்து இந்தப் பேரணியை நடத்தின.

கோப்பாய் கந்தசுவாமி கோயில் முன்றலில் நேற்

(4ஆம் பக்கம் பார்க்க)

தொண்டமானாறில் நேற்றும் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 17 நேற்று தொண்டமானாறு இராணுவ முகாமில் இருந்து வெளியே வந்த இராணுவத்தை நோக்கி புலிகள் சுட்டதில் சிப்பாய்களில் இருவர் கொல்லப்பட்டனர்.

தொண்டமானாறு இராணுவ முகாமில் இருந்து நேற்று நண்பகல் 12 மணியளவில் எமது மக்களை வேட்டையாடுவதற்காக தொண்டமானாறு பாலம் வழியாக ஐம்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் வெளிவர முயல்கையில் நாம் குறிபார்த்துச்சுட்டதில் இராணுவ தரப்பில் சிலர் கொல்லப்பட்டனர்.

மேலும் முகாமைவிட்டு வெளிவர முடியாத இராணுவத்தினர் முகாமினுள் இருந்துமோட்டார் ஷெல்களை வெளியே ஏவினர்.

இவ்வாறு நேற்று தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (உ-7)

ஜே. ஆரின் உறுதி

சென்னை, ஜூலை, 16 இலங்கைத் தமிழ்ப் பகுதிகளில் தமிழ்க் குடிமக்கள் கொல்லப்படுவது குறித்துத் தனது இராணுவ அதிகாரிகளுடன் விவாதிக்கப் போவதாக ஜனாதிபதி ஜெயவர்த்தன உறுதி கூறினாராம்.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஒருவர் சொன்னதாகச் சென்னை வானொலி தனது மாநிலச் செய்தியில் புதன் மாலை தெரிவித்தது (உ-எ)

துப்பாக்கி சூட்டு காயங்களுடன் சடலங்கள்

மட்டக்களப்பு, ஜூலை 17 மட்டக்களப்பு ஐயன்கேணி பகுதியில் இரண்டு பேரின் சடலங்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் [illegible] கண்டு பிடிக்கப்பட்டன

இந்தச் சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை. (உ-21)

பொலனறுவையில் அலுவலகம் தீக்கிரை

முக்கிய தஸ்தாவேஜுகளும் நாசம்

மட்டக்களப்பு, ஜூலை 17 பொலனறுவையில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலகம் செவ்வாய் அதிகாலை திடீரென தீப்பிடித்து எரிந்து நாசமாகியது.

சபையால் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட 6 கோடி 50 லட்சம் ரூபா கடன் தொடர்பான முக்கிய தஸ்தாவேஜுகளும் கட்டடத்துடன் சேர்ந்து எரிந்து சாம்பராகியது.

வீடமைப்புக் கடன் பெற்றவர்களினதும் கடன் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களினதும் உறுதிகள்—

சுவர்ணபூமித் திட்டம் தொடர்பான உறுதிகள் உட்பட பல முக்கிய தஸ்தாவேஜுகளும் தீக்கிரையாகியுள்ளன.

தீக்கிரையாகியுள்ள கட்டடத்திலுள் இருந்த இரும்பு அலுமாரி ஒன்றினுள் 7 லட்சம் ரூபா பணம் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அலுமாரி தற்போது பொலிஸாரால் சீல் வைக்கப்பட்டிருக்கிறது. (உ-21)

அரசு கூட்டணிப் பேச்சு விவரம்

இந்திய அரசுக்கு உடனுக்குடன் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 17 அரசு — கூட்டணிப் பேச்சுக்கள் குறித்து இந்திய அரசு அதிகாரிகளுக்கு உடனுக்குடன் அறிவிக்கப்படுகிறது.

தினமும் பேச்சுக்கள் முடிந்த பின்னர் கூட்டணித் தலைவர்கள் இந்தியத் தூதரகத்துக்குச் சென்று இந்தியத் தூதர் திரு டிக்ஸிற்றுக்கு எடுத்துச் சொல்கின்றனர்.

பின்னர் இந்திய அரசு அதிகாரிகளுக்கு விவரம் அனுப்பப்படுகிறது. (உ-எ)

யாழ். குடா நாட்டில் நேற்று பூரண ஹர்த்தால்

யாழ்ப்பாணம், ஜூலை 17 லொறி உரிமையாளர் சங்கம் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணிக்கு முழு ஆதரவு தெரிவித்து யாழ் குடாநாட்டில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

குடாநாட்டில் நகரப் பகுதிகள் உட்பட சகல பொது இடங்களும் வெறிச்சோடிக் கிடந்தன.

தனியார் பஸ்கள் இ.போ.ச. பஸ்கள் உட்பட எந்த வாகனங்களும் வீதியில் ஓடவில்லை.

கடைகள் அனைத்தும் முற்றும் முழுதாக இழுத்து மூடப்பட்டிருந்

(4ஆம் பக்கம் பார்க்க)

யாழ். குடாநாட்டில்

சிவில் அதிகாரங்களை நீக்கும் முயற்சியில் அரசு

மகஜரில் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 17 யாழ் குடாநாட்டில் சிவில் நிர்வாகத்தை மீண்டும் கொண்டு வருகின்றோம் என்று உலகுக்குக் கூறிக்கொண்டு மறுபக்கத்தில் இருக்கும் சிவில் அதிகாரங்களை நீக்கும் முயற்சியில் தான் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது.

வடபிராந்திய லொறி போக்குவரத்துச்சேவைச் சங்கம், யாழ் அரச அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் இப்படித் தெரிவித்திருக்கிறது.

முன்னர் அரசஅதிபரே தனியார் பஸ், லொறிகளுக்கு பெர்மிட் கொடுத்து வந்தார்.

ஜூலை முதலாம் திகதி தொடக்கம் இராணுவ இணைப்பதிகாரியிடம் பெர்மிட் பெறவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பத்துச் சதவீதமானோரே பலாலி, கோட்டை இராணுவ முகாம்களுக்குச் சென்று பெர்மிட் பெற முயற்சித்தனர்.

பின்னர் லொறிகள் பொருள்களுடனும் தனி

(4ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்திமுரளி



தேர்தல் 'மேனியாக்' பிடிச்சிருக்கிற அம்மையாருக்கு இப்ப ஆத்திரம், ஆத்திரமா வரப்போகுதே !!!

நேற்று நடைபெற்ற லொறி, மினிபஸ் ஊர்வலத்தின்போது எடுக்கப்பட்ட படம் (உ)

இளைய தலைமுறையினருக்கும் இன்றைய நாளிதழ்

யாழ்ப்பாணத்திலுள்ள போராளிகளுடனும் பேச வேண்டும் -- கொல்வின்

கொழும்பு, ஜூலை 17

ஆயுதந்தாங்கிய தமிழ்ப் போராளிகளுடனும் அரசாங்கம் பேச்சுக்களை நடத்த வேண்டும். தமிழ்ப் போராளிகள் இந்தியாவில் மட்டும் இருக்கவில்லை யாழ்ப்பாணத்தில் மக்கள் மத்தியிலும் வாழ்கின்றார்கள்.

இப்படி லங்கா சமசமாஜக் கட்சித்தலைவர் டாக்டர் கொல்வின் ஆர் டி. சில்வா சொன்னார்

கொழும்பு சட்டக் கல்லூரியில் நடந்த "இலங்கை எங்கே செல்கின்றது?" — என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில் டாக்டர் டி. சில்வா மேலும் பேசுகையில் சொன்னதாவது;

கூட்டணி — அரசுப் பேச்சுக்கள் நம்பிக்கையைத் தருகின்றன. சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி இலங்கையைக் காப்பாற்ற அனைவரும் முன்வரவேண்டும்.

காலவரம்பு நிர்ணயிக்கப்பட்ட யுத்த நிறுத்தம் ஒன்று அமுலாக்கப்படவேண்டும் அப்போதுதான் அமைதிச் சூழ்நிலையில் பேச்சுக்கள் நடத்தப்பட முடியும்

இப்படி அவர் சொன்னார்.

கம்யூனிஸ்ட் கட்சியைச்சேர்ந்த திரு ராஜா கொலுரே பேசுகையில்,

'இனப்பிரச்சினைக்கான நிரந்தரத்தீர்வு சோஷலிசத்தின் அடிப்படையில் தான் காணப்படும்.

ஆனால் இடைக்காலத் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சியை கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கின்றது.

தமிழ் மக்கள் தனித் தேசிய இனமாக மதிக்கப்படவேண்டும்; அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்படவேண்டும் வடக்கு, கிழக்கில் உள்ள பாராதுருப்புக்கள் படை விலக்கப்படவேண்டும். இப்படி திரு கொலுரே சொன்னார்

தமிழ் காங்கிரஸ் செயலாளர் திரு குமார் பொன்னம்பலம் பேசுகையில் சொன்னதாவது:

தமிழ், உத்தியோக மொழியாக அங்கீகரிக்கப்படவேண்டும்.

தமிழர் தாயகம் என்பது ஏற்றுக் கொள்ளப்படவேண்டும்

அரச குடியேற்றத் திட்டங்கள் மூலம் செய்யப்பட்ட அநீதிகள் நீக்கப்படவேண்டும்.

இந்த அடிப்படையிலேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும்.

இப்படி திரு. குமார் பொன்னம்பலம் சொன்னார்.

அரசியல் மாநாடு குழு நிலையில் ஆராய்வு

கொழும்பு, ஜூலை 16

செவ்வாயன்று ஆரம்பமான அரசியல் கட்சிகள் மாநாடு, குழுக்களாகப் பிரிந்து மாகாண சபைத் திட்டத்தின் கீழ் அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமான நடைமுறைகளை செவ்வாய் தொடக்கம் ஆராயத் தொடங்கியது

இந்த ஆராய்வின் போது ஏற்படும் சிக்கல்கள், கருத்து வேற்றுமைகள் பற்றி உடனுக்குடன் தீர்வுகாண ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் தலைமையில் இணைப்புக் கமிட்டி ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

கிளிநொச்சியில் சமீபத்தில்

இறந்தோரில் 50 பேர் அப்பாவிகள்

பிரஜைகள் குழு ஜனாதிபதி கவனத்துக்குக் கொண்டுவரும்

கிளிநொச்சி, ஜூலை 17

கிளிநொச்சியில் சமீபத்தில் நடந்த சம்பவங்களில் இறந்தோரில் சுமார் 50 பேர் அப்பாவிகள் இது சம்பந்தமாக ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வரப்படும்

கிளிநொச்சி புதிய பிரஜைகள் குழுக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

கிளிநொச்சி குருகுலத்தில் கிளிநொச்சி பிரஜைகள் குழுவின் புதிய நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது.

கிளிநொச்சிநீர்ப்பாசன பொறியிலாளரும் கிளிநொச்சி பிரஜைகள் குழுவின் தற்காலிக அமைப்புத் தலைவருமான திரு த சுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

கடந்த 9 ஆம் திகதி நடைபெற்ற இக்கூட்டத்தில் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட பொது ஸ்தாபனங்கள் கலந்து கொண்டன.

கிளிநொச்சியில் இன்று பிரஜைகள் குழுவின் சேவை முக்கியமானதாகவுள்ளதால் புதிய செயற்குழு ஒன்றை உடனடியாக தெரிவுசெய்ய வேண்டுமென அவை வலியுறுத்திக் கேட்டுக்கொண்டன

இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி பிரஜைகள் குழுவின் புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது

இதில் தலைவராக திரு. த சுப்பிரமணியம் (நீர்ப்பாசனப் பொறியியலாளர்) உபதலைவர்கள் திரு வே கதிரவேலு (குருகுல நிர்வாகி) திரு. மு. இராமநாதன் (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) செயலாளராக திரு. எஸ் பி. பரராசசேகரம் (மரணவிசாரணை அதிகாரி) உபசெயலாளராக திரு பா. பஞ்சலிங்கம் ([illegible] திணைக்கள உதவி முகாமையாளர்) பொருளாளராக திரு. க. சிவராஜலிங்கம் (புகையிரத நிலைய அதிபர்) ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக திரு. எஸ் சிவசம்பு, திரு எஸ் தங்கராசா, திரு. எம் பிரசாத், திரு எம் சந்தசாமி, திரு ஆ. செல்வத்துரை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ள அசம்பாவிதங்களினால் தற்போது இயங்க முடியாத நிலையிலுள்ள கச்சேரி, வைத்தியசாலை நீர்ப்பாசன அலுவலகம் போன்றவற்றை இயங்க வைப்பது தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பது என்ற தீர்மானமும் இதில் அடங்கும் (இ-76)

யாழ் மத்திய கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் 34 ஆவது வருடாந்த மதியபோசன விருந்து அண்மையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட டாக்டர் திரு வி விஜயராஜா உரையாற்றுவதையும் மன்றத்தின் தலைவர் செல்வன் சி ஆனந்தராசா, கல்லூரி அதிபர் திரு. வி பாலசுந்தரம், திருமதி விஜயராஜா ஆகியோர் அருகில் இருப்பதையும் படத்தில் காணலாம். (உ)

சைவமும் தமிழும் இருக்கும்வரை நாவலர் புகழ் நிலைத்து நிற்கும்

சிற்பங்களை உருவாக்கும் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 17

உலகில் சைவமும் தமிழும் இருக்கும் வரை நாவலர் பெருமானின் புகழும் பெருமையும் நிலைத்து நிற்கும். சைவ சமயத்தையும் சமய கலாசாரத்தையும், பேணிப்பாதுகாக்க சைவர்களை வாழ்வித்தவர் நாவலர் பெருமானுவார். அவரது பணிகளையும், போதனைகளையும் நாம் பேணிப் பாதுகாப்பதன்மூலமே நாம்சைவத்தையும் தமிழையும் பேணுபவர்களாக வாழமுடியும்

நாவலர் வரலாற்றுக் கண்காட்சிக்கான சிற்பங்களை உருவாக்கும் அங்குரார்ப்பண வைபவத்தில் ஆசியுரையாற்றிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மேற்கண்டவாறு தெரிவித்தார்

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்திற்கு நாவலர் சபையின் துணைத்தலைவரான பேராசிரியர் அ சண்முகதாஸ் தலைமை வகித்தார்.

சித்திரான் சு சொக்கலிங்கத்தால் தயாரிக்கப்பட்ட நாவலர் வரலாற்றுச் சிற்பங்களுக்கான தொகுப்பு இச்சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

திரு ம.சிவராசா, திரு. எஸ் வி முருகேசு, திரு எம். சி தியாகராசா, திரு க. சண்முகலிங்கம் ஜே. பி ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைபவத்தைத் தொடக்கி வைத்தனர்

யாழ் மாநகர ஆணையாளரும் நாவலர் சபையின் துணைத்தலைவர்களில் ஒருவருமான திரு சி.வீ. கே சிவஞானம் வரவேற்புரை நிகழ்த்தினார்

பேராசிரியர் அ சண்முகதாஸ் யாழ்மாவட்ட இந்து இளைஞர் பேரவைத்தலைவர் திரு இ. சி சண்முகலிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

சிற்பங்களை உருவாக்குவதற்கான ஆரம்பக்கிரியைகளை முறைப்படி நாவலர் சபையின் இணைச் செயலாளர்களான திரு சி. சிவசுப்பிரமணியம், திரு நா சோமகாந்தன், துணைத்தலைவர்களான திரு சி. வி கே. சிவஞானம், பேராசிரியர் அ. சண்முகதாஸ், இந்து இளைஞர் பேரவைத் தலைவர் திரு. இ சி சண்முகலிங்கம் ஆகியோர் நல்லை ஆதீன சுவாமிகளின் ஆசியுடன் சிற்பாசாரியாரிடம் கையளித்தனர் இந்து இளைஞர் பேரவைச் செயலாளர் திரு எஸ். பாலசிங்கம் நன்றியுரையாற்றினார் (இ)

குளவி சுட்டான் பாடசாலையில் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 17

நெடுங்கேணி குளவி சுட்டான் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் விஞ்ஞான கூடம், நூல் நிலையம் ஆசிரியர் விடுதித் திறப்பு விழா 23 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு பாடசாலை அதிபர் திரு. சு. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்தவிழாவுக்கு முதன்மை விருந்தினராக வவுனியா கல்விப் பணிப்பாளர் திரு வி. சபாநாயகமும் சிறப்புவிருந்தினராக நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் திரு வி பத்மநாதனும் புளியங்குள வட்டாரக் கல்வி அதிபர் திரு சி கணபதிப்பிள்ளையும் கலந்துகொள்கின்றனர்

சனசமூக நிலையங்களைப் பலன் தரும் வகையில் உபயோகிக்க வேண்டும்

மானிப்பாய், ஜூலை 17

சனசமூக நிலையங்களை கிராமம்தோறும் திறந்து வைப்பதுடன் நின்றுவிடாது அவை மக்களுக்கு பயன் தரும் வகையில் உபயோகப் படுத்தப்படவேண்டும் நெருக்கடிமிகுந்த இக்காலகட்டத்தில் சனசமூக நிலையங்கள் மூலம் மக்களுக்கு பல சேவைகளை ஆற்ற முடியும்.

யாழ்ப்பாணம் மில்க் வைற் தொழில் அதிபர் திரு. க. கனகராசா ஜே. பி. மானிப்பாயில் சனசமூக நிலையம் ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் இப்படிக் கூறினார்.

மானிப்பாய் தெற்கு — உடுவில் வீதியில் உதயசூரியன் சனசமூக நிலையத்தை அவர் திறந்து வைத்துஉரையாற்றினார்.

திரு. எஸ். தருமசீலன் விழாவுக்கு தலைமை வகித்தார்

அவர் பேசும் போது, தற்போதைய சூழ்நிலையில் இதுபோன்ற சனசமூக நிலையங்கள் அமைவது மிகவும் பொருத்தமானது என்றார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி இளைப்பாறிய அதிபர் திரு வி. சி. சாமி சனசமூக நிலையத்தின் பெயர்ப்பலகையினை திரை நீக்கம் செய்து வைத்தார்.

திருமதி ஆர். துரைசிங்கம் சனசமூக நிலையத்துக்கென ஒரு பரப்பு நிலத்தை அன்பளிப்பாக வழங்கினார்.

திருமதி ஆர். துரைசிங்கம் திரு. கே. கிருஷ்ண பிள்ளையும் குத்துவிளக்கேற்றி விழாவைத்தொடக்கி வைத்தனர்.

திரு. கே. பெரியபிள்ளை திரு. ஆர். சடாட்சரம், திரு. எஸ். ஆர். ஜெயம் திரு எஸ். நகுலேஸ்வரன், திரு. எம். கிரிதரன் ஜே பி. ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டனர்.

திரு. வி. இரத்தினசிங்கத்தினால் நன்றியுரை வழங்கப்பட்டது (இ 90)

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

தீவுப்பகுதியி தனியான ஒரு களஞ்சியம்

3 மாதங்களுக்குப் போதுமான உணவுப் பொருள்களை சேமிக்க

யாழ்ப்பாணம், ஜூலை 17

மக்களின் மூன்று மாதகாலத் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் தீவுப் பகுதியில் களஞ்சியப் படுத்தப்படும்

இதற்கெனத் தீவுப்பகுதியில் தனியாக ஒருகளஞ்சியம் நிறுவப்படும்

யாழ் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற தீவுப்பகுதி அபிவிருத்திக் கழக அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சிறப்புரை ஆற்றுகையில் யாழ் மாவட்ட உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. எஸ் பற்குணம் மேற்கண்டவாறு கூறினார்

கழகத் தலைவர் கலாநிதி எஸ் பாலச்சந்திரன் வைபவத்துக்கு தலைமை வகித்தார்.

திரு பற்குணம் தொடர்ந்து கூறியதாவது

தீவுப்பகுதி மட்டுமல்லாமல் யாழ் மாவட்டமே உணவுப் பிரச்சினையைப் பொறுத்தஅளவில்பெரும் நெருக்கடியை எதிர்நோக்கி உள்ளது.

ஒரு நாளைக்கு இருபது லொறிகளில் அரிசி கொண்டு வரப்பட்டால் தான் எமது மாவட்டத் தேவையை நாம் பூர்த்தி செய்ய முடியும். அந்தளவு சாத்தியக் கூறுகள் இப்போது இல்லை.

அதே வேளை கூட்டுறவுச் சங்கங்களின் துஷ்பிரயோகம் தவிர்க்கப்படவேண்டும். விநியோகிக்கப்படும் பொருள்கள் நியாய விலையில் விற்கப்படுவது அவசியம் இதனை உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு திரு பற்குணம் பேசி முடித்தார். (இ-9)

மேரி பஸ்தியன் கல்வி உதவித் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

சென்ற வருடம் தைமாதம் 6 ஆம் திகதி சீருடையினரால் கொல்லப்பட்ட அருள் தந்தை மேரி பஸ்தியனின் நினைவாக கல்வி உதவித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியினரால் இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அருள்தந்தை மேரிபஸ்தியன் வசதிகுறைந்த மக்களின் நல்வாழ்வுக்காக ஆற்றிய பணிகளைத் தொடரவே இத்திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. (இ-5)

வடக்கு--கிழக்கு இணைப்பை ஏற்க முடியாது என்கிறார் விஜே

புதுடில்லி, ஜூலை 16

வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் யோசனையை எமது கட்சியினால் ஏற்றுக்கொள்ள முடியாது.

இது துரதிஷ்டவசமானது

இணைப்புக் கோரிக்கையைச் சிங்கள மக்கள் முன்வைப்பது கஷ்டமான காரியம்.

இப்படி இலங்கை மக்கள் கட்சிச் செயலாளர் திரு. விஜயகுமாரணதுங்க புதுடில்லியில் செய்தியாளர் மத்தியில் சொன்னார்.

புதிய யோசனைகள் பற்றிப் போராளிகள் அவ்வளவு பிழையாக எண்ணவில்லை

இலங்கையின் தமிழ்ப் பகுதிகளில் யுத்த நிறுத்த பிரசாரம் ஒன்றை மேற்கொள்ள இருக்கிறேன்

புத்த குருமாரின் தலையீடு, சர்வசன வாக்கெடுப்பு நடத்தும் கோரிக்கை ஆகியவற்றை எமது கட்சி வன்மையாக எதிர்க்கும்

இப்படி திரு விஜயகுமாரணதுங்க சொன்னார்

இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு ஏ பி வெங்கடேஸ்வரன், வெளியுறவு ஆலோசனைக் கமிட்டித் தலைவர் திரு ஜி பார்த்தசாரதி ஆகியோரைச் சந்தித்த பின்னரே திரு விஜயகுமாரணதுங்க செய்தியாளர்களைச் சந்தித்தார் (இ-எ 2)

தெல்லிப்பழை - பன்னாலை வரத்தலம்
ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தானம்

பத்தாவது ஆண்டு
மகோற்சவ விஞ்ஞாபனம்

விநாயகநேயச் செல்வர்களே !

நிகழும் மங்களகரமான அக்ஷய ஆண்டு ஆவணி மீ 7ஆம் திகதி (23-08-1986) சனிக்கிழமை பகல் 12 15 மணிக்குத் துவஜாரோகணமாகித் தொடர்ந்து பன்னிரு தினங்கள் மகோற்சவம் நிகழத் திருவருள் பாலித்துள்ளதால் அடியார்கள் அனைவரும் தங்களால் இயன்றளவு பணவுதவியாகவோ, பொருளுதவியாகவோ கொடுத்து பன்னிரு மஹோற்சவப் பெருநாட்களிலும் ஆலயத்திற்கு வந்து விநாயகப் பெருமானைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்

மேற்கூறிய தேவஸ்தான துவஜாரோகணம் பொது உபயமாகையால் இதற்கான பணத்தையோ, பொருட்களையோ கொடுப்பதற்கு நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

செல்வி மல்லிகா மகேஸ்வரக்குருக்கள்,
வரத்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தானம்,
பன்னாலை, தெல்லிப்பழை.

நேசையாவுக்கு பட்டமளிப்பும் பாராட்டும்

யாழ்ப்பாணம், ஜூலை 17

பேராசிரியர் கு.நேசையா அவர்களின் பட்டமளிப்பும் பாராட்டுவிழாவும் அறவழிப்பாளர் கழகங்களின் பரிசளிப்புவிழாவும் எதிர்வரும் சனிக்கிழமை (19-7-1986) பிற்பகல் 1.30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற இருக்கிறது

பேராசிரியர் எஸ். வித்தியானந்தன் ஆரம்பப் பேருரையுடன், பட்டமளித்தலையும் நடத்துவார்.

ஆசியுரை, ஆய்வுரைகளின் பின்னர் பேராசிரியர் நேசையா பதிலுரை நிகழ்த்துவார். (இ-எ)

மக்கள் முகம்

தீவுப்பகுதி அபிவிருத்திக் கழகம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

தீவுப்பகுதி அபிவிருத்திக் கழக அங்குரார்ப்பணக் கூட்டம் சென்ற சனிக்கிழமை காலை யாழ் இந்துக் கல்லூரியில்நடைபெற்ற பொழுது பின் வருவோர் நடப்பாண்டு உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

போஷகர்கள்:- சட்டத்தரணி திரு. பி. கதிரவேலு, வணபிதா திருபானந்தன், ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர், வேலணை உதவி அரச அதிபர், நெடுந்தீவு உதவி அரச அதிபர்.

தலைவர்:- கலாநிதி. எஸ். பாலச்சந்திரன்.

உப தலைவர்கள்:- திரு. எம். சண்முகநாதன், திரு. எஸ். பரமலிங்கம் திரு. எஸ். சதாசிவம்.

இணைச்செயலாளர்கள்:- திரு. கனகரட்டினம், திரு. க. வில்வரட்னம்.

பொருளாளர்:- திரு. [illegible] (இ-9)

கல்வி அத்திவாரம் பலமானதாக இருக்க

வேண்டும் என்கிறார் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஜூலை 17

ஆரம்பப் பாடசாலையில் மாணவரின் கல்வியில் போடப்படும் அத்திவாரம் பலமானதாக அமையவேண்டும்.

இவ்வாறு வடமாநில கல்விப் பணிப்பாளர் இரா சுந்தரலிங்கம் கூறினார்

இளவாலை றே. க. த. ஆண்கள் பாடசாலையின் பெற்றோர் தினவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் புகைபடியாத கண்ணாடிபோல் வெள்ளை உள்ளம் கொண்டவர்கள்.

இவர்களுக்கு அளிக்கப்படும் கல்வியும் சிந்தனையுமே, இவர்களை நாளைய சமூகத்தின் முழுமனிதராகக் காட்டும்.

இந்த வகையில் கத்தோலிக்க தமிழ் ஆரம்ப பாடசாலைகளை நிறுவி நிர்வகித்த கிறிஸ்தவ துறவிகளை நாம் மறக்க முடியாது.

இப்படி அவர் கூறினார்.

பாடசாலை அதிபர் ஆ. சவிரிப்பிள்ளை தலைமையில் விழா நடைபெற்றது.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம், அருட் திரு. அன்ரன் இராஜநாயகம், அருட்திரு மைக்கல் பற்றிக். சி. சிவபாலசிங்கம், அ. சந்தியாப்பிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர்.

மணிப்புரியில் சிரமதானம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்ப்பாணம் மணிப்புரி நகர் பகுதியில் பலகாலமாகத் திருத்தப்படாமல் இருந்துவந்தபிரதான வீதிகளை கலைமகள் சனசமூக நிலையத்தினர் சிரமதானம்மூலம் திருத்தியமைத்துவருகின்றனர்.

இவ்வீதிகளின் புனரமைப்பு பூர்த்தியாவதற்கு கலைமகள் சனசமூக நிலையத்தினருக்கு ஆதரவு அளிக்கும்படி செயலாளர் திரு க. பாலசுப்பிரமணியம் [illegible]னார்.

"மண் சுமந்த மேனியர்-2"

13-07-86 (ஞாயிற்றுக்கிழமை) அன்று 11.30 மணிக்கு நடைபெற இருந்த நாடகம் 19-07-86 (சனிக்கிழமை) 11.30 மணிக்காட்சியாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது மேற்படி காட்சிக்கு நுழைவுச்சீட்டு எடுத்தவர்கள் அதே நுழைவுச் சீட்டுடன் ஒத்திவைக்கப்பட்ட காட்சியைப் பார்க்கலாம். அத்துடன் காலை 9 மணிக்கும் நாடகக் காட்சி உண்டு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில்.

நீத்தார் பட்டியல்

கந்தர் வல்லிபுரம்

நாவற்குழி கந்தர் வல்லிபுரம் காலமானார். இவர் தியாகராசா (கனிஷ்ட பகுதி அதிபர், நாவற்குழி மகா வித்தியாலயம்), பரமேஸ்வரி ஆகியோரது தகப்பனாரும், ரதிலீலாவதி, இரத்தினம் ஆகியோரது மாமனாரும், அன்பலிலனின் பேரனுமாவார். செவ்வாய் மாலை காலமான இவரது ஈமக்கிரியைகள் புதன் காலை, 'தாமரை', நாவற்குழி இல்லத்தில் நடைபெற்றது. தகவல் அனைவரும் ஏற்றுக்கொள்க. உரிய காலத்தில் அறிவிக்கமுடியாமைக்கு வருந்துகிறேன்.

—க. வ. தியாகராசா

உதய சங்கற்பம்

நல்லது, கெட்டது எதுவும் கிடையாது. எண்ணம் அவ்வாறு செய்கிறது. உணவு தண்ணீர் நெருப்பு ஆகியவற்றைவிட இரக்கம், அன்பு, சகோதரத்துவம் ஆகியவை மனிதனுக்கு அதிகமாகத் தேவைப்படுகிறது.

—சுவாமி சிவானந்தர்

உதயன்
உண்மை - விஞ்ஞானம் - நடுநிலைமை

இல. 13 2வது ஒழுங்கை
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 24805
22073
17-07-86
த.பெ. 23

அரசு கண் திறக்குமா?

வடபிராந்திய லொறிப் போக்குவரத்துச் சங்கமும், யாழ். முஸ்லிம் போக்குவரத்து ஒன்றியமும் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணியையும் ஹர்த்தாலையும் மிக வெற்றிகரமாக நடத்தின.

அரசாங்கத்தின் ஆகப்பிந்திய அடக்குமுறை விதிகளை ஆட்சேபித்து அன்று மக்கள் எதிர்ப்புச் சரிவரக் காட்டப்பட்டிருக்கிறது

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லும் வாகனங்கள் இராணுவ முகாமுக்குச் சென்று அனுமதிப் பத்திரம் பெற்றுச் செல்ல வேண்டும் என்பதே பிந்திய அடக்குமுறை விதி

கொழும்பில் குண்டு வெடிப்புகள் நடைபெற்றதைத் தொடர்ந்து யாழ் - கொழும்பு போக்குவரத்துக்குப் பல கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டன. பாதையில் உள்ள படை முகாம்களால் சோதிக்கப்பட்டு அவை அனுமதி கொடுத்தாலே மேற்கொண்டு பயணம் செய்யலாம் என்பது முதலில் வந்த விதி

வாகனங்களில் இங்கிருந்து எடுத்துச் செல்லப்படும் பொருள்களை படைமுகாம்களில் இறக்கி சோதனை என்ற கெடுபிடிக்குப் பின்னர் அவற்றைத் திரும்ப ஏற்றிய பின்னரே வாகனங்கள் பயணத்தைத் தொடர வேண்டிய சிரமம் இருந்தது.

அதுவும், ஒரு முகாமில் சோதித்து அனுமதித்தால் போதாது என்று வழியில் உள்ள அத்தனை முகாம்களிலும் பொருள்களை ஏற்றி இறக்க வேண்டிய அவலத்துக்கு ஆளாக்கப்பட்டார்கள் லொறிச் சிப்பந்திகள். அதனால் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் வாகனங்கள் நான்கு ஐந்து நாட்களின் பின்னரே கொழும்பு சென்றடைய முடிந்தது

இத்தனை சிரமங்கள், கஷ்டங்கள், அவலங்களையும் பொருட்படுத்தாது வாகன உரிமையாளர்களும் சிப்பந்திகளும் இங்கிருந்து பொருள்களை ஏற்றிச் சென்றும், அங்கிருந்து கொண்டு வந்தும் தமது தொழிலைச் செய்தனர்

ஆனால் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் பலாலி முகாமுக்குச் சென்று அனுமதிச் சீட்டுப் பெற்றே கொழும்புப் பயணத்தைத் தொடங்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது லொறி உரிமையாளர்களும், சிப்பந்திகளும் தமது உயிரைப் பணயம் வைத்துத் தொழில் செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர். முதல் இரண்டொரு நாட்களில், உயிராபத்தை எதிர் நோக்கிக் கொண்டு அனுமதிச் சீட்டுப் பெறச் சென்றவர்களுக்கும் மிகக் கசப்பான அனுபவங்கள் ஏற்பட்டன

ஆபத்தின் மத்தியில் அனுமதிச் சீட்டுப் பெற்றவர்களும் பாதையில் படையினரின் சொல்லொணாத இம்சைகளுக்கு ஆளாகினர். அவர்கள் பல விதங்களிலும் கஷ்டமும் நஷ்டமும் மன உளைச்சலும் அடைய வேண்டியதாயிற்று அத்தோடு அவர்கள் தொழிலை நிறுத்தி விட்டனர்.

அதன் பின்னர் கடந்த இரண்டு வார காலமாக யாழ்-கொழும்பு லொறி - வாகனப்போக்குவரத்து முற்றாக ஸ்தம்பித்து விட்டது. அதனால் யாழ் குடா நாட்டின் உற்பத்திப் பொருள்கள் தென்னிலங்கை செல்வதும், கொழும்பில் இருந்து பாவனைப் பொருள்கள் இங்கு வருவதும் முற்றாகத் தடைப்பட்டுள்ளன

வடக்கு-கிழக்கு மக்கள் இலங்கை மக்கள் அல்லர் என்று அரசு கருதுகிறது. அதனால் அவர்களை அடக்கி ஆள முற்படுகிறது அதற்கெனக் கொடிய சட்டங்களையும் விதிகளையும் உத்தரவுகளையும் அது நடைமுறைப்படுத்துகிறது. சிவில் நிர்வாகம் ஆற்ற வேண்டிய பணிகளை எல்லாம் படிப்படியாக இராணுவ அதிகாரத்துக்கு மாற்றுகிறது

தமிழ்ப் பகுதிகளில் இராணுவ ஆட்சியை நிலை நிறுத்தி, அப்பகுதிகளின் பொருளாதாரத்தைச் சீர்குலைத்து அவர்களை ஆயுதங்களால் மட்டுமன்றி அடக்குமுறைச் சட்டங்களால் பட்டினி போட்டும் அழித்தொழிக்க அரசு கங்கணம் கட்டி நிற்கிறது.

இத்தகைய ஆர்ப்பாட்டப் பேரணிகளும் ஹர்த்தால்களும் அரசாங்கத்தினர் கண்ணைத் திறக்குமா என்பது சந்தேகமே.

எனினும் இந்தக் கொடுமையை உலகறியச் செய்வதற்கு இதுபோன்ற பேரணிகள் உதவும். தமிழ் மக்கள் மனிதாபிமானமற்ற, நீதியற்ற கொடுங்கோல் ஆட்சியின் கீழ் வதைக்கப்படுகிறார்கள் - அழிக்கப்படுகிறார்கள் என்பதனை அடிக்கடி அகிலத்துக்கு எடுத்துச் சொல்வது அவசியம்.

7 பிள்ளைகளின் தந்தை சுட்டுக் கொலை

ஊர்காவல் படையினரின் கைவரிசை

திருகோணமலை, ஜூலை 17

பாண் வாங்கச் சென்ற 7 பிள்ளைகளின் தந்தை ஒருவர் ஊர்காவல்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் திருகோணமலை, பாலையூற்றுப் பகுதியில் இடம்பெற்றது

நீர்கொழும்பைச் சேர்ந்தவரும் பாலையூற்றில் வசித்து வந்தவருமான ரைறன் பெர்னாண்டோ உயிரிழந்தவர் ஆவர்.

திங்கட்கிழமை காலை நடந்த இச்சம்பவம் பற்றிய மரணவிசாரணையை திருமலை பதில் நீதிவான் திரு. ஆர். சந்திரபாலன் நடத்தினார்.

ஊர்காவல் படைவீரர் ஷெல்டன் பெரேரா சாட்சியம் அளித்தார்.

கொலை என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது.

(எ-150)

சீன ஊடுருவல் இந்திய எல்லைக்குள்

பாரதம் குற்றஞ்சாட்டுகிறது

புதுடில்லி, ஜூலை 16

இந்திய எல்லைப் பகுதியான அருணாசலப் பிரதேசத்தினுள் சீனத் துருப்புகள் ஊடுருவல் செய்துள்ளதாக இந்தியா குற்றம்சாட்டியுள்ளது.

ஹிந்தோராம் பள்ளத்தாக்குக்கு அருகாமையில் அருணாசலப் பிரதேசத்தில் சீனா இந்த ஊடுருவலைச் செய்துள்ளது.

சிலர் சீருடை அணிந்தும் பலர் சாதாரண உடையிலும் அப்பகுதியை ஆக்கிரமித்தனர். 400 பேர் கொண்ட அப்படை தொடர்ச்சியாக அங்கேயே நிலை கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய ஊடுருவல்கள் அவ்வப் பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன ஆனால் இப்பகுதியில் இந்திய மண்ணை ஆக்கிரமிக்கும் ஊடுருவல்களில் இது தான் மிகவும் பெரியதாகும் இப்படித் தெரிவிக்கப்பட்டது

1962 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தோ—சீன எல்லைச் சண்டைக்கும் இதே போன்ற ஊடுருவல்தான் வழிகோலியது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-ஒ)

மூழ்கிய கப்பல் கண்டுபிடிப்பு

வாஷிங்டன், ஜூலை16

1912 ஆம் ஆண்டு வட அத்திலாந்திக் கடலில் மூழ்கிய கப்பலொன்று கடலுக்கடியில் அமெரிக்க விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பனிப் பாறைகளில் மோதியதால் ஏற்பட்ட வெடிப்புக் காரணமாக மூழ்கியதாகக் கருதப்படும் 'ரைரெனி' என்ற பிரமாண்டமான இக்கப்பலின் உட்பகுதிகளும் அவர்களால் படம் பிடிக்கப்பட்டுள்ளன.

1912 லிருந்து இக்கப்பலைக் கண்டுபிடிக்க பல நாட்டவர்களாலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் இம்முறைதான் அமெரிக்க விஞ்ஞானிகளுக்கு வெற்றி கிடைத்துள்ளது

(உ-ஒ)

வெளி உலகில்

ஹிந்தி திணிப்புக்கு எதிராக எம். ஜி. ஆர். மன்ற மாநில மாநாடு தீர்மானம்

மதுரை, ஜூலை16

ஜவஹர்லால் நேருவின் மொழிக் கொள்கைக்கு மாறாக ஹிந்தியை திணிப்பது தவிர்க்கப்படல் வேண்டும்

இவ்வாறு மதுரையில் நடைபெற்று முடிவடைந்த எம். ஜீ. ஆர் மன்ற மாநில மாநாடு பிரதமர் ராஜீவ் காந்தியை கோருவதற்குத் தீர்மானித்துள்ளது.

சேது சமுத்திரதிட்டத்தை உடனடியாக அமுல் செய்ய வேண்டும் என்ற மற்றும் ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இரண்டு நாட்களில் நடைபெற்ற மாநாட்டில் மாநில அமைச்சர்கள் பலர் கலந்து கொண்டனர். (இ-ஒ)

செய்திச் சாரம்

தென் ஆபிரிக்காவில் கொலைக் குற்றச்சாட்டுக்களின் பெயரில் கடந்த மாதம் மட்டும் ஆயிரத்துக்கும் அதிகமானோர் கைதானார்கள் என அந்நாட்டு அரசு அறிவித்தது.

*

பாகிஸ்தானின் அணு ஆயுத உற்பத்திபற்றி பாகிஸ்தான் பிரதமர் முஹமட்கான் யூனிஜோ வாஷிங்டனில் ஜனாதிபதி றேகனுடன் பேச்சுக்கள் நடத்தினார்.

*

ரஷ்யாவின் செர்னோபல் அணு ஆலை விபத்தினால் பாதிப்படைந்து வதிவிடங்களை இழந்த ஒரு லட்சம் குடும்பங்களுக்கு மாஸ்கோவில் புதிய வீடுகள் வழங்கப்பட்டுள்ளன

*

லண்டனுக்கு விஜயம் செய்திருந்த ரஷ்யவெளிநாட்டமைச்சர் எரிவார்ட் சொர்னுவ்சேவ் அங்கு இங்கிலாந்து அரசுடன் பல பொருளாதார ஒப்பந்தங்களுக்குக்கைச்சாத்திட்ட பின்னர் மாஸ்கோ திரும்பினார்.

கடந்த ஜனவரி மாதம் விண்ணில் வெடித்துச் சிதறிய சலஞ்சர் கலத்தில் தனது கணவன் பலியானதற்கு நஷ்டஈடாக ஒன்றரைக்கோடி டாலர் வழங்க வேண்டும் என 'நாஸா' மீது மைக்கல் ஜெய் சிமித் என்ற விண்வெளி வீரரின் மனைவி வழக்குத் தாக்கல் செய்திருக்கிறார்.

*

போதைவஸ்து கடத்தல் நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக பொலிவியாவிற்கு ஆறு ஹெலிக்கொப்டர்களையும் இராணுவச் சிப்பாய்களையும் அமெரிக்கா அரசு உதவியாக அனுப்பியுள்ளது

•

தென்ஆபிரிக்கா மீதான பொருளாதாரத்தடை விதிப்பில் காமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என காமன்வெல்த் பொதுச் செயலாளர் டாக்டர் ராம்பால் தெரிவித்துள்ளார்.

*

சைப்பிரஸ் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அங்குள்ள கிரேக்கரையும் துருக்கியரையும் சகல விதத்திலும் சம உரிமை கொண்டவர்களாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என துருக்கிப் பிரதமர் துர்குட் ஓசால் தெரிவித்தார்.

*

மேற்கு பேர்லினுக்கு விஜயம் செய்திருந்த கிழக்கு ஜெர்மனி விஞ்ஞானியான டாக்டர் அல்பேட் மெய்ஸினரை கடத்தியதாக மே.ஜெர்மன் அரசு மீது கிழக்கு ஜெர்மனி குற்றம் சாட்டியுள்ளது.

*

சுயஸ்கால்வாய் மூலம் ஆகக்கூடிய வருமானமாக ஒரு பில்லியன் டாலர்களுக்கும் அதிகமான பணம் எகிப்துக்கு வருவாகியுள்ளது.

தி. மு. க. வுக்கு

ஏன் தனியான பொலீஸ்?

சென்னை, ஜூலை 16

திராவிட முன்னேற்றக் கழகம் தனது தலைவர்கள், தொண்டர்களைப் பாதுகாக்கத் தனிப் பொலீஸ் படை அமைக்கும் என்று அறிவித்து இருப்பது தேசவிரோத நடவடிக்கையாகும்.

இப்படித் தமிழக அமைச்சர் ஆர் சௌந்தரராஜன் தெரிவித்தார்.

உலக எம். ஜி. ஆர் மன்றத்தின் மதுரை மாநில மாநாட்டில் பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு சொன்னார். (உ-எ-2)

மலேஷியாவும் பகிஷ்கரிக்கும்

கோலாலம்பூர், ஜூலை 16

மலேஷியாவும் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை பகிஷ்கரிக்கப் போவதாக அறிவித்துள்ளது. (ஒ)

விண்வெளி சஞ்சாரம் முடிவு

மாஸ்கோ, ஜூலை 16

கடந்த நான்கு மாதம் விண்வெளியில்சஞ்சரித்த ரஷ்ய விண்வெளி வீரர்களான லியூனிட் கிஸினும் சொலோவியாவும் இன்று பூமிக்குத் திரும்பினர்.

விண்வெளியில் முதல் முறையாக இவர்கள் ஒரு விண்வெளி நிலையத்திலிருந்து இன்னொன்றுக்குச் சென்றிருந்தனர். (ஒ)

உத்தராயண முடிவில்

ஆரம்பிக்கும் ஆடிப்பிறப்பு

பூமி தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனைச் சுற்றியும் ஓடிக் கொண்டிருக்கின்றது.

இப் பிரபஞ்சத்தில் உள்ள எண்ணிறந்த கோள்கள் யாவும் தொடர்ந்து தத்தமக்குரிய நியதிகளுக்கமைய இயங்கிக் கொண்டேயிருக்கின்றன

இப்பேரண்ட இயக்கத்தின் ஒரு நுண்ணிய பகுதி தான் நாம் வாழும் பூமியின் இயக்கம்.

பூமியானது சூரியனைச் சுற்றி ஒருநீள்வட்டமான (கோழிமுட்டை வடிவான) பாதையில் ஓடிக் கொண்டிருக்கின்றது அப்படி ஒருமுறை சுற்றி வர ஏறத்தாழ 365¼ நாட்கள் ஆகின்றன இக் காலப்பரப்பை நம் முன்னோர்கள் ஒரு சூரிய ஆண்டு எனவும்—

சந்திரன் பூமியைச் சுற்றி ஓடும் காலத்தைக் கொண்டும் நட்சத்திரங்களின் பெயர்களின் அடிப்படையிலும் மாதங்கள் எனவும் பலவாறு கணிக்கப்படுகின்றன

சமஸ்கிருதத்தில் ''வர்ஷ'' என்ற சொல் முதலில் மழையைக் குறித்தது பின்னர் ஒரு மழைக்காலம் தொடங்கி அடுத்த மழைக்காலம் முடிய உள்ள காலமாகிய ஆண்டைக்குறிக்கும் வழக்கு ஏற்பட்டது (வர்ஷ-வருடம்)

நாம் வாழும் ஈழமும், ஈழத்தின் அறிவியல் மற்றும் பல துறைகளிலும் தாயகமான பாரததேசமும் பூமத்திய ரேகைக்கு வடக்கே - அல்லது பூமியின் பரப்பில் வடக்குப் பக்கத்தில் - அமைந்திருக்கின்றன.

ஈழம், இந்தியா, பரந்த இந்திய நாடுகள் யாவற்றிலும் முற்காலத்தில் இந்தியாவின் அறிவகங்களான காஞ்சி, நாளந்தா, பாடலிபுத்திரம் போன்ற இடங்களை மையமாகக் கொண்டே வான சாத்திரக் கணிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. (தற்காலத்தில் 'கிறீன்விச்' கணிக்கப்படுவது போன்று)

இந்தியா, இந்தியா சார்ந்த நாடுகளில் வெப்பம் கூடிய காலத்தைக் கோடைகாலமெனவும் வெப்பம் குறைந்த காலத்தை மாரிகாலமெனவும் வகுத்தனர்.

இந்த தட்ப வெட்ப (குளிர் - உஷ்ண) மாற்றமானது பூமி சூரியனைச் சுற்றி ஓடிக்கொண்டிருக்கும் தன்மையால் ஏற்படுவதொன்றாகும் பூமி சூரியனைச் சுற்றிச் செல்லும் நீள் வட்டப் பாதையை இரு நீள் பாதிகளாகப் பிரித்தால் அந்தப் பிரிவுகள் இரண்டும் தை தொடங்கி ஆனி முடிய உள்ள மாதங்கள் ஒரு பகுதியாகவும்—

ஆடி தொடங்கி மார்கழி முடிய உள்ள மாதங்கள் இன்னொரு பகுதியாகவும் அமையும்.

பூமியின் வடபகுதி கூடிய சூரியவெப்பத்தைப் பெறும் மாதங்களான தை தொடங்கி ஆனி வரையுள்ள காலம் கோடை - அல்லது "உத்தராயணம்" என்றும்—

ஆடி தொடக்கம் மார்கழி வரையுள்ள காலம் மாரி அல்லது 'தக்ஷிணாயனம் - என்றும் அழைக்கப்பட்டன.

ஆடிப்பிறப்புடன் உத்தராயணம் முடிந்து தக்ஷிணாயனம் தொடங்குகிறது. ஆகவே ஆடிப்பிறப்பானது வருடத்தின் நடு அல்லது பிற்பகுதிப் பாதி வருடத்தின் தொடக்கம் எனலாம்.

இந்திய வருடப்பிறப்பு சித்திரை முதலாம் திகதியில் அமைந்ததற்கு வேறு பல காரணங்கள் உள்ளன

(சித்திரைத் தொடக்கமானது உத்தராயணத்தின் சரி நடுவில் அமைந்ததும் வசந்தகாலமாகிய அது புது முயற்சிகளை [illegible] உகந்தாயிருப்பதும் அவற்றுட்சில வாகும்.

ஆகவே ஆடிப்பிறப்பானது தைப்பொங்கல், வருடப்பிறப்பு போன்று முக்கியமானதொன்றாகும்.

க. யோகநாதன்
உதவிப் பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்.

[illegible]

குறள்:
தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான்.

பொருள்:
துன்பம் செய்யும் தீவினைகள் தன்னை வருத்துதலை விரும்பாதவன், தீய செயல்களைத் தான் பிறரிடம் செய்யாமல் இருக்க வேண்டும்.

திருமுறைகளைப் பண்ணுடன் ஓதினால் பலன் அதிகம் கிடைக்கும்

யாழ்ப்பாணம். ஜூலை 17

திருமுறைகளை நாம் பண்ணுடன் ஓதினால் பலன் அதிகம் பெறலாம்.

இவ்வாறு பிரதம கல்வி அதிகாரி கு. சோமசுந்தரம் கூறினார்.

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வடமாகாண பண்ணிசை போட்டிகளில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

தமிழ் மக்களின் கலை, பண்பாடு என்பன பண்ணிசை மூலம் வெளிப்படுத்தப்படவேண்டும்.

வருடாவருடம் பண்ணிசைப் போட்டியில் பங்குபற்றும் மாணவர் எண்ணிக்கை அதி[illegible]பதையிட்டுப் பெரு மகிழ்ச்சி அடை[illegible]

பண்ணிசையை வளர்ப்பதற்காகத் தொடர்ந்து 3 வருடங்களாக போட்டியாளர்களுக்கு தம் செலவில் பரிசில்கள் வழங்கும் சிவதர்ம வள்ளல் கனகராசாவை நாம் மறக்கக்கூடாது

இப்படி திரு. கு. சோமசுந்தரம் கூறினார்.

பிரதம கல்வியதிகாரி வி. தங்கராசா தலைமையில் போட்டிகள் நடைபெற்றன.

வெற்றி பெற்றோருக்கு சிவதர்ம வள்ளல் கனகராசா பரிசில்களை வழங்கினார்.

சமித்த வட்டாரக் கல்வி அதிகாரி கணபதிப்பிள்ளை நன்றி தெரிவித்துப் பேசினார். (இ-5)

காவலூரில் ஊர்வலம்

ஊர்காவற்றுறை, ஜூலை 17

அரசின் மாகாணசபை யோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ஈழப் போராட்டத்திற்கு சர்வதேச ஆதரவு வேண்டியும் மாபெரும் ஊர்வலமொன்று ஊர்காவற்றுறையில் நடைபெற்றது

ஊர்காவற்றுறையில் ஆரம்பமான இவ்வூர்வலம் வேலணை வங்களாவடியில் முடிவடைந்தது. (இ-16)

ஐந்து குழுக்களும் நாளை ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பிக்கும்

கொழும்பு, ஜூலை 17

அரசியல் கட்சிகள் மாநாட்டில் நியமிக்கப்பட்ட ஐந்து குழுக்களும் தங்கள் அறிக்கைகளை நாளை வெள்ளிக்கிழமை ஜனாதிபதியிடம் கையளிக்கும்

மாகாணசபை யோசனைகளை ஐந்து பிரிவுகளாக ஆராய்ந்து இக்குழுக்கள் அறிக்கைகளைத் தயாரிக்கும்.

ஐந்து குழுக்களும் வருமாறு:

1. பொது அதிகாரப் பரவலாக்கல் குழு:
தலைவர்கள்: பிரதமர் பிரேமதாஸ அமைச்சர் ரணில் விக்ரமசிங்க.
செயலாளர்கள்; கே எச்.ஜே. விஜயதாஸ சரித்தா ரத்வத்தை, ஆர். [illegible]
சட்ட ஆலோசகர்: மார்க் பெர்னாண்டோ

2. 1984 சர்வகட்சி மாநாட்டு 'பி' குழு அறிக்கை அமுல் நடத்துதல் குழு:
தலைவர்: அமைச்சர் தேவநாயகம்
செயலாளர்: ஜி. குமாரணதுங்கா
சட்ட ஆலோசகர்: பாயிஸ் முஸ்தபா

3. மாகாணசபைக்குழு:
தலைவர்: அமைச்சர் சாஹுல் ஹமீது
செயலாளர்; நவின் அபயசேகரா
சட்ட ஆலோசகர்: எச் எல் டி. சில்வா

4 காணி, காணி அபிவிருத்திக் குழு:
தலைவர்: அமைச்சர் காமினி திஸநாயக்கா
செயலாளர்கள்; நந்தா அபயவிக்ரம, ஐவன் சமரவிக்ரம
சட்ட ஆலோசகர்; சந்திரா சேனவிரத்ன

5. சட்டம்ஒழுங்குக்குழு:
தலைவர்: அமைச்சர் லலித் அத்துலத் முதலி
செயலாளர்: டிரல் குணதிலக
சட்ட ஆலோசகர்: எஸ். எல். குணசேகரா

ஜனாதிபதியின் தலைமையிலான இணைப்புக் குழுவின் செயலாளர் சட்டத்தரணி பி. எச். என். ஜெயமஹா (உ-எ)

மாகாண சபையால் பிரச்சினை உருவாகும்

சுதந்திரக்கட்சி அறிக்கை

கொழும்பு, ஜூலை 17

ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக வேறு பிரச்சினைகளை உருவாக்கவே மாகாண சபைத்திட்டம் உதவும்.

இப்படி சுதந்திரக்கட்சி மேற்கண்டவாறு கூறியுள்ளது.

மாகாணசபைத் திட்டத்தை நிராகரிப்பது, அரசியல் கட்சிகள் மாநாட்டில் கலந்து கொள்ளாதது ஆகியன குறித்து எடுக்கப்பட்ட முடிவுகளை விளக்கி சுதந்திரக்கட்சி அறிக்கை ஒன்றைக் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்டது.

மாகாணசபை முறை, சர்வாதிகாரத்தைப் பலப்படுத்தத்தான் உதவும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதற்காக ஏனைய பகுதிகளிலும் மாகாண சபைத் திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டிய தேவை இல்லை. அப்படி செய்வது புதிய பிரச்சினைகளையே தோற்றுவிக்கும்.

இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (உ-எ)

சமய நிகழ்ச்சிகளில்

இரட்டையர் புலம் உற்சவாரம்பம்

யாழ்ப்பாணம். ஜூலை17

சண்டிலிப்பாய் இரட்டையர் புலம் வயிரவர் கோவில் வருடாந்த அலங்கார உற்சவங்கள் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றன.

26 ஆம் திகதி பொங்கலும் 27 ஆம் திகதி பூங்காவனமும் நடைபெற்று உற்சவங்கள் பூர்த்தியடையும். -(ஒ)

வீதியின் பெயரை மாற்ற எதிர்ப்பு

யாழ்ப்பாணம். ஜூலை17

திருநெல்வேலியிலுள்ள ஆடிய பாதம் வீதியின் பெயரை மாற்றுவதற்கு திருநெல்வேலி பிரஜைகள் குழு ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

பலநூறு வருடங்களாக இப்பெயர் பிரபல்யம் பெற்றதும், இவ்வீதியை எல்லையாகக் குறிப்பிட்டு பல காணி உறுதிகள் இருப்பதும் பிரஜைகள் குழுவின் மறுப்புக்கான காரணங்களாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-ஒ)

ரெலிபோன் ரெலெக்ஸ்
24 மணி நேர சேவை
(எல்லா நாடுகளும்)
அமைதியான, பாதுகாப்பான இடம்.
இரவில் தங்குவதற்கு அறைகள்
நியாயமான கட்டணங்கள்
Safe, Convenient Vehicle Parking
Mack Communications & Travels
1ம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். Tele; 24791, 24836

உதயன்

17 07 1986 வியாழக்கிழமை

வெளிநாட்டுப் பிரயாணம்
★ துரித ஒழுங்குகள்
★ சலுகைக் கட்டண விமானச் சீட்டுகள்
★ Confirmations, Re-confirmations
★ பாஸ்போட், விசா, பொன்ட்
நம்பிக்கையைப் பெற்றவர்கள்
Mack Communications & Travels
1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். Tele: 24791, 24836

அடம்பன் தாக்குதலில் 47 பேர் உயிரிழந்தனர்

யாழ்ப்பாணம், ஜூலை 17 கடந்த திங்கட்கிழமை அடம்பன் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல்களின்போது 47 பேர் உயிரிழந்துள்ளனர்.

இத்தத் தாக்குதலின்போது பாதிக்கப்பட்ட இடங்களை மன்னார் அரசாங்க அதிபர் ஜனாப் எம். எம். மசூல், மன்னார் பேராயர் தோமஸ் சவுந்தரநாயகம், மாவட்ட வைத்திய அதிகாரி திரு கனகரத்தினம் ஆகியோர் பார்வையிட்டபோது மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வோதய இயக்கமும் மன்னார் மறுவாழ்வு துயர்துடைப்புச் சங்கமும் உதவிபுரிய முன் வந்துள்ளன.

இதேவேளை நேற்று அடம்பன் பகுதி வழமைக்குத் திரும்பியதாகவும் வாகனப் போக்குவரத்துக்கள் நடைபெற்றதாகவும் தெரியவந்தது. (உ-10)

கூட்டணி இன்று மீண்டும் பேச்சு

கொழும்பு, ஜூலை 17 தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்கள் இன்று மாலை மீண்டும் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவர்.

பொதுவான அதிகாரப் பகிர்வு சம்பந்தமாக இப்பேச்சுக்கள் இடம்பெறும்.

நேற்றுமாலை அமைச்சர் காமினி திஸநாயக்காவுடன் கூட்டணிக் குழு பேச்சுக்களை நடத்தியது (அ-எ)

ஈழத்து தமிழ் பேசும் பெருமக்களுக்கும் சுதந்திர தமிழ் ஈழத்தை வென்றெடுக்கப் போராடும் புனித இயக்கங்களுக்கும் பணிவான விண்ணப்பம்

அரச கெடுபிடிகளின் மத்தியிலும் வேறுபல சிரமங்கள் மத்தியிலும் தமிழ் பேசும் பெரு மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் இன்னோரன்ன அத்தியாவசியப் பொருள்களையும், யாழ் பெருமக்களுக்குத் தருவிக்கும் தலையாய பணியில், யாழ் லொறிப் போக்குவரத்துச் சேவையினர் ஈடுபட்டிருப்பது எல்லோருக்கும் நன்கு தெரிந்ததே.

எமது ஸ்தாபனம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வழமையான சிரமங்களுக்கூடாகப் பொருள்களை லொறியில் கொண்டுவரும் வேளையில் அந்த லொறி எமது சொந்த மண்ணில் விசுவமடு, றெட்பானாவுக்கு அருகாமையில் 14—6—1986இல் கடத்தப்பட்டமை தமிழ் பேசும் பெருமக்களுக்கு குறிப்பாக பொருள் நுகர்வோருக்கு இழைக்கப்பட்ட அநீதியாக நாம் கருதுகிறோம்,

இந்த அநீதியையும் அநியாயத்தையும் கண்டித்து சில பொது ஸ்தாபனங்களும் பொது அமைப்புக்களும் சில புனித இயக்கங்களும் இத்தவறை இழைத்தவர்கள் தமது தவறை ஒப்புக்கொண்டு அதற்குப் பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்று அறிக்கைகள் விட்டிருந்தும் இதுவரை எந்தவிதமான பலனையும் காணோம்,

லொறி போக்குவரத்துச் சேவை எத்தகைய அத்தியாவசிய சேவை என்பதை தமிழ் பேசும் பொது மக்கள் நேற்று ஒருங்கிணைந்து நடத்திய பூரண ஹர்த்தால் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்கள் அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த எமது லொறி சேவைக்கு நேர்ந்த துர்ப்பாக்கியத்துக்கு ஈடுசெய்யும் பணிக்கு தமிழ்பேசும் பெருமக்களினதும் புனித இயக்கங்களினதும் பேராதரவை மிகவும் தாழ்மையுடன் மீண்டும் மீண்டும் வேண்டி நிற்கின்றோம்.

இங்ஙனம்,
தமிழ்பேசும் பெருமக்களின் சேவையிலீடுபட்டிருக்கும்,
எஸ். வி. முருகேசு ஸ்தாபனத்தினர்.

லொறிகள்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றுக் காலை 9 மணி அளவில் ஆரம்பமானபேரணி பருத்தித்துறை வீதியூடாக ஆஸ்பத்திரியை அடைந்து பின்அங்கிருந்து நண்பகல் ஒரு மணி அளவில் யாழ் செயலகத்தை அடைந்தது.

சில லொறிகளில் வாழை மரங்களும் சுலோக அட்டைகளும் கட்டப்பட்டிருந்தன.

செயலகத்தைப் பேரணி சென்றடைந்ததும் லொறி, மினி பஸ்களில் வந்தவர்கள் அங்கு சுமார் 15 நிமிட நேரம் தமது வாகனங்களின் 'ஹோர்ன்' சப்தங்களை விடாது எழுப்பி தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

பின்னர் கச்சேரி முன்றலில் நடைபெற்ற கூட்டம் ஒன்றினை அடுத்து லொறி உரிமையாளர் சங்கத் தலைவர் திரு எஸ். அழகானந்தம் யாழ்- அரச அதிபரிடம் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தார்.

மகஜரைப் பெற்றுக்கொண்ட அரச அதிபர் யாழ்-கொழும்பு லொறிச் சேவை சம்பந்தமான பிரச்சினையில் தாம் கூடிய அக்கறை எடுத்து வெகு விரைவில் இது தொடர்பாக ஒரு முடிவை அறிவிப்பதாகவும் உறுதியளித்தார்.

லொறிகள் வரிசையாக யாழ் -- ஸ்ரான்லி வீதியால் பேரணியாக வந்து கொண்டிருந்த வேளையில் ஹெலிக்கொப்டர் ஒன்று தாழப் பறந்து பேரணிக்கு மேலாக வட்டமிட்டுச் சென்றது (உ-10)

சிவில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யார் பஸ்கள் பயணிகளுடனும் முகாம்களுக்கு வந்து பெர்மிட் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று பணிக்கப்பட்டது.

இந்த நடைமுறையின்படி பெர்மிட் எடுக்க 3 தினங்கள் செல்லும்.

இதன் காரணமாக 90 சதவீதமான தனியார் பஸ்கள், லொறிகள் ஓடுவதில்லை.

இப்படி மகஜரில் கூறப்பட்டுள்ளது. மகஜரின் பிரதிகள் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், நிதி அமைச்சர், போக்குவரத்து அமைச்சர், அமைச்சர் தொண்டமான் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (உ-எ-10)

மண் சுமந்த மேனியர்

யாழ்ப்பாணம், ஜூலை17 யாழ் பல்கலைக்கழக கலாசார குழுவின் தயாரிப்பான மண்சுமந்த மேனியர்—2 நாடகம் எதிர்வரும் சனிக்கிழமை மேடையேறுகிறது.

சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இந்த நாடகம் நடைபெறும்.

கடந்த ஞாயிறன்று நடைபெற இருந்து ஒத்திவைக்கப்பட்ட நாடக நிகழ்ச்சி சனிக்கிழமை காலை 11. 30க்கு நடைபெறும். (உ - 7)

மூதூரில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெண்களும், குழந்தைகளும் என்று திருமலையில் இருந்து வந்த மற்றொரு செய்தி தெரிவித்தது. கொல்லப்பட்டவர்களின் முழு பெயர் விவரமோ அவர்களது சடலங்கள் என்னவாயிற்று என்பது பற்றியோ தகவல் ஏதும் பெறமுடியவில்லை. (அ-உ-7)

கமாண்டோக்கள்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ம்த்தியதில் கமாண்டோக்கள் நிலைகுலைந்தனர்.

இத் தாக்குதலால் அதில் வந்த பலர் பலத்த காயங்களுக்கு உள்ளானார்கள்.

இவர்களிடம் இருந்து முதலுதவி பொருள்கள் பல எம்மால் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலின்போது எமது தரப்பில் எதுவிதமான இழப்புகளும் ஏற்படவில்லை.

நேற்றுக்காலை 10 மணியளவில் இதே இராணுவமுகாமில் இருந்து புறப்பட்ட பதினொரு படையினர் ஜீப் வண்டியொன்றில் அம்பாறையில் தாண்டியடியால் சென்றுகொண்டிருந்தபோது எமது நிலக்கண்ணிவெடித் தாக்குதலில் ஜீப் சிக்குண்டதில் அது சிதைந்தது.

அதில் வந்த பலர் கொல்லப்பட்டனர். சிலர் காயமடைந்தனர். (உ-7)

யாழ்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தன. பாடசாலைகள் எதுவும் நடைபெறவில்லை. அரச அலுவலகங்களுக்கும் ஊழியர்கள் மிக மிகக் குறைவாகவே வந்திருந்தனர்.

லொறி உரிமையாளர் சங்கம் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணிக்கு ஆதரவு தெரிவித்தே யாழ் வர்த்தகர் சங்கம் இக் கடையடைப்பை நடத்தியது.

ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பகுதிக்கும், இனி [illegible] ஊழியர்கள் மிகக் குறைவாக [illegible]. (உ-10)

மோட்டார் சைக்கிளில் குண்டு 2 பேர் பலி! 2 பேர் காயம்!!

மட்டக்களப்பு, ஜூலை17 மோட்டார் சைக்கிளில் வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்ததில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர். இருவர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் பட்டிருப்புத் தொகுதியிலுள்ள வெல்லாவெளிப் பகுதியில் செவ்வாய் மாலை நடந்தது.

கைவிடப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை மீட்க வந்த சிப்பாய்கள் வீதியால் சென்ற பொதுமக்களில் சிலரை அழைத்து மோட்டார் சைக்கிளை'ஸ்ராட்' செய்யக் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிளை 'ஸ்ராட்' செய்தவர் குண்டு வெடிப்பினால் அந்த இடத்திலேயே மரணமானார்.

ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட கணபதிப்பிள்ளை (வயது 55) என்பவர் அங்கு நேற்று மரணமானார்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த தம்பிராஜா (வயது 55), பாக்கியராஜா (வயது 25) ஆகியோர் ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றனர். (உ-21)

வடக்கில் கலவரத்தை தூண்ட அரசு முயற்சி

இணைப்புக்குழு அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை17 தற்பொழுது அமுல்படுத்தப்பட்டிருக்கும் வாகன அனுமதிப் பத்திரம் வழங்கும் முறையால் தமிழ்—முஸ்லிம் வாகனச் சொந்தக்காரர் மத்தியில் மோதலைத் தூண்டி கலவரமொன்றை யாழ்ப்பாணப் பகுதியிலும் உருவாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இவ்வாறு தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கு எதிரான போராட்டத்திற்கான இணைப்புக் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அனுமதிப்பத்திரமுறையால் யாழ் குடாநாட்டு மக்களை பலவந்தமாகப் பட்டினியில் சிக்க வைக்கவும்அரசு முயலுகின்றது. எனவே உடனடியாக அனுமதிப்பத்திர முறை ரத்து செய்யப்படவேண்டும்.

—இவ்வாறு இணைப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

தொலை தொடர்பு திணைக்களம் பண்ணை அலுவலகம் மீண்டும் இயங்குகிறது

யாழ்ப்பாணம் ஜூலை 17 யாழ்ப்பாணம் பண்ணையிலுள்ள தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்திற்குப் பெண் ஊழியர்கள் உட்பட ஊழியர்கள் பலர் நேற்றுக் கடமைக்குச் சென்றனர்.

கடந்த இருமாதகாலமாக கோட்டை முகாமுக்கு அருகில் இருக்கும் இந்தப் பரிவர்த்தனை நிலையத்திற்கு ஊழியர்கள் கடமைக்குச் செல்லவில்லை.

கடமைக்குத் திரும்ப வேண்டும் என்ற மேலிடத்து உத்தரவையடுத்து பெண் ஊழியர்கள் உட்பட ஊழியர்கள் காலை முதல் நண்பகல் 1 மணி வரை கடமையில் ஈடுபட்டனர்.

இதுவரை இவர்கள் பருத்தித்துறை வீதியில் உள்ள தற்காலிகக்காரியாலயத்தில் கடமையாற்றி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-7)

இனப்பிரச்சினையை உருவாக்கியவர் யார்?

காமினி பொன்சேகா விளக்குகிறார்

கொழும்பு, ஜூலை17 இனப்பிரச்சினை சாதாரண மக்களினால் உருவாக்கப்பட்டது அல்ல அரசியல் சந்தர்ப்பவாதிகளினால் தான் இது உருவாக்கப்பட்டது.

இப்படித் திரைப்பட நடிகர் காமினி பொன்சேகா சொன்னார்.

இலங்கை மன்றக் கல்லூரியும் சினிமா வாசகர் சங்கமும் கூட்டாக நடத்திய கருத்தரங்கு ஒன்றில் திரு. காமினி பொன்சேகா பேசினார்.

திரு பொன்சேகா மேலும் சொன்னதாவது: ஐக்கிய இலங்கை என்ற அடிப்படையில் அனைவரும் உழைக்க வேண்டும் ஒருவரை ஒருவர் நாம் நம்ப வேண்டும். அப்பொழுது தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட முடியும்.

இப்படி அவர் சொன்னார்.

கட்சியில் பிளவு ஏற்படுவதைக்கூட கவனிக்காது தமிழ்ப்போராளிகளுடன் பேச்சுக்கள் நடத்தியமைக்காகச் சகோதர நடிகர் விஜயகுமாரணதுங்காவுக்கு திரு பொன்சேகா பாராட்டுத் தெரிவித்தார். (க-எ)

எதிர்ப்பு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பதாக கொழும்பு ஆங்கில தினசரி ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டது.

அந்தப் பத்திரிகைச் செய்தி தவறு என்று மல்வத்தைப் பிடாதிபதி சொன்னதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேற்று அறிவித்தது. (க-எ)

பொதுதேர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி கூறியிருப்பதாவது:

தங்கள் 15. 7. 86 கடிதம் கிடைத்தது.

மாகாணசபை யோசனைகள் பற்றிய உங்கள் கருத்துக்களை அரசியல் கட்சிகள் மாநாட்டில் முன்வைப்பேன்.

பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற தங்கள் கோரிக்கை 1989 ஆம் ஆண்டில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்—இப்படி ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (க-எ)

தமிழர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மறுத்துவிட்டன.

இத்தருணத்தில் குழுநிலைக் கூட்டங்களை நடத்துவது பயன் தராது.

ஆகவே நவசம சமாஜக் கட்சி குழுநிலைக் கூட்டங்களில் பங்கு பற்றாது.

ஆனால் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும் முழுஅளவிலான அரசியல் கட்சிகள் மாநாட்டில் கட்சி பங்குபற்றும்.

இப்படி நவ சமசமாஜக் கட்சி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ)

ஆசிரியர் பற்றுக்குறை

நீர்வேலி, ஜூலை17 நீர்வேலி வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக நிலவி வரும் ஆசிரிய பற்றுக்குறை நீக்கப்படாததால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இணைப்புக்கு வலியுறுத்து

கொழும்பு, ஜூலை17 இனப் பிரச்சினைக்கான தீர்வு வடக்கும் கிழக்கும் இணைந்த ஒன்றாகவே இருக்கவேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் இருந்து சென்ற கூட்டணித் தூதுக்குழு, கொழும்பில் தங்கி உள்ள கூட்டணித் தலைவர்களைச் சந்தித்து மேற்கண்டவாறு வற்புறுத்தியது.

வடக்கும் கிழக்கும் இணைந்த தீர்வு ஒன்றினால் தான் தமிழினம் காப்பாற்றப்படும். தமிழர் சுயகௌரவத்துடன் தனி இனமாக வாழவும், இணைப்புத்தான் வழிவகுக்கும் — இப்படி கிழக்கு மாகாணத்தூதுக் குழு வற்புறுத்தியது.

இக்குழுவில் திரு. அ. சம்பந்தமூர்த்தி, திரு. எஸ். யோசப், திரு. அ. பட்சிவாத்தினம் திரு. இரா அம்பலவாணர் ஆகியோர் சென்றிருந்தனர். (இ-எ 2)

கொழும்புக்கு
உடனடித் தொலைபேசித் தொடர்புகள்
சர்வதேச ரெலிபோன் -ரெலெக்ஸ்

துரித கதியில்
தொலைபேசித்
தொடர்பைப்
பெற்றுத் தருபவர்கள்
என்ற பெருமையைப்
பெற்ற ஸ்தாபனம்
M. C. T.

- எந்த நாட்டுக்கும் துரித தொடர்பு
- நியாயமான சரியான கட்டணம்
- பாதுகாப்பு மிக்க இடம்
- இரவில் தங்க அறை வசதி
- பாதுகாப்பான வாகனத் தரிப்பிடம்

Mack Communications & Travels
No: 8, 1st Lane, Point Pedro Road,
Jaffna. Tele:- 24791, 24836

ரெலிகுளோப் ரெலிபோன் சேவை

- ☐ ஆறு லைன்கள் !
- ☐ வியத்தகு விரைவு !
- ☐ அருகில் அமர்ந்து அளவளாவும் தெளிவு !
- ☐ சந்தோஷத்தில் ஆழ்த்தும் சௌகரியங்கள் !
- ☐ நிறைவான சேவைக்கு நியாயமான கட்டணம் !
- ☐ கோட்டைக் குண்டடி எட்டாத பணிமனை !

உங்கள் அடுத்த ரெலிபோன் அழைப்பு—
ஆனந்தமான அனுபவமாக அமைய நாடுங்கள்:—

ரெலிகுளோப், ஸ்ரான்லி வீதி,
யாழ்நகர்.

தரமான VELONA
தயாரிப்புக்களை யாழ்நகரில்
பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்
'ARTHE GROUP'
* Banians * Ladies Vest
* Panties * Baby Suits
Etc. Etc.
தொடர்புகொள்ள:
ARTHE
Jewellers (Pvt.) Ltd.
111, Kasturiar Road, Jaffna.
T'Phone; 23628

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 17—07—1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road. JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 60 N86.